# MCOP No.52/2021

**தேதி- 10.12.2024**

**பெயர் : திரு.பூபதி, த/பெ. முனுசாமி**

**ம.சா.2** இன்று அழைக்கப்பட்டு 1வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

நான் எதற்காக இன்று நீதிமன்றத்திற்கு வருகை தந்துள்ளேன் என்றால் சாட்சி சொல்வதற்காகவும் மேலும், சம்பவம் என் வீட்டிற்கு முன்பு நடந்தது. என்று விபத்து நடந்தது என்றால் 15.05.2021 அன்று விபத்து நடந்தது. சம்பவம் நடந்த நேரம் என்ன என்றால் காலை சுமார் 8.30 மணி இருக்கும். கன்னியப்பன் மற்றும் உஷாராணி ஆகியோரை எனக்கு நன்கு தெரியுமா என்றால் நன்றாக தெரியும். விபத்தில் மனுதாரரின் மகன் இறந்து போனது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நன்றாக தெரியும், பக்கத்து ஊர்க்காரர்.

விபத்தில் இறந்த மனுதாரரின் மகனுக்கு விபத்தின் போது என்ன வயது இருக்கும் என்றால் சுமாராக 19 வயது இருக்கும். விபத்தில் இறந்து போன மனுதாரரின் மகன் விபத்து சமயத்தில் என்ன வேலை செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் நான் நேரடியாக பாாக்கவில்லை, டம் என்ற சத்தம் கேட்டு தான் நான் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தேன்.

என் வீட்டிலிருந்து விபத்து நடந்த இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 10 மீட்டர் இருக்கும், காம்பவுண்டிற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் 5 மீட்டர் தூரம் தான் இருக்கும். நான் சத்தம் கேட்டு வீட்டை விட்டு வெளியே வந்து விபத்தை பார்த்து விட்டு பின்பு நான் தான் ஆம்புலன்சிற்கு போன் செய்தேன் என்றால் சரிதான். மனுதாரர்களை எனக்கு நன்கு தெரியும் என்பதால் தான் நான் நீதிமன்றத்திற்கு வந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, உண்மை சம்பவத்தை நேரடியாக

சொல்கிறேன்.

சாட்சி சம்மன் எதுவும் நீதிமன்றத்தில் இருந்து வராமல் நானாகவே வந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, உண்மையாக நான் பார்த்த சம்பவத்தை பற்றி தான் சொல்கிறேன்.

**<u>2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் நானும் போலீசாரிடம் ஸ்டேட்மண்ட் கொடுத்துள்ளேன். விபத்து சாலை மூன்று வழி சாலை என்றால் சரிதான், பேருந்து செல்லும் வழி தான். அதனால் தான் அந்த சாலைக்கு ரோடு தெரு என்று பெயர் என்றால் சரிதான். நான் மனுதாரர் கன்னியப்பனுக்கு நேரடியாக தகவல் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

கன்னியப்பனை எனக்கு நன்றாக தெரியும் என்றல் சரிதான். நான் விபத்தை நேரில் பார்த்துள்ளேன், நான் ஏன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் எனக்கு அவ்வளவு விவரம் தெரியாது. நான் விபத்தை நேரில் பார்த்துள்ளேன் என்று சொல்வது தவறு என்றாலும், என்னுடைய முகவரி தவறு என்றாலும், நான் கன்னியப்பனுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge.
Arani.